

மெர்குரி பிலிம்ஸ்

# "போன மச்சான் திரும்பி வந்தான்"

# " போன மச்சான் திரும்பி வந்தான் "

## திரையில்

—*— நடிகர்கள் —*—

ஸ்ரீராம் — தியாகு என்ற தியாகராஜன்
தங்கவேலு — சாம்பு என்ற சாம்பசிவம்
Friend ராமசாமி — குப்புசாமி
T. K. ராமச்சந்திரன் — வில்லன்—மணி
C. P. கிட்டான் — கிட்டான்
ராஜா வஹாப் காஷ்மீரி — வடநாட்டான் ஓட்டல்
சங்கரமூர்த்தி — வீட்டுக்காரன் [ரூம்வாசி
கணபதிபட் — சங்கரன்
சம்பத்குமார் — கணபதி தியாகுவின்
வேலப்பன் — டாக்டர் [நண்பன்
கணேஷ் சிங் — நரஸிம்மன்

சங்கர், மணி பாகவதர், கோட்டயம் கைலாச பாகவதர், பிரஸாத், வரதராஜன், குண்டுப் பிள்ளை முதலியோர்

—*— நடிகைகள் —*—

குசலகுமாரி — சந்திரா
லக்ஷ்மிகாந்தா — விமலா
அங்கமுத்து — அலமேலு
ரத்னம் — ரத்னம்
ஜெயகௌரி — விமலாவின் தாயார்
ரெங்கநாயகி — வேலைக்காரி
ஸரஸ்வதி — நரஸிம்மனின் தாயார்
ஸரோஜா — ,, தங்கை
வரதாபாய் — கல்யாணி
ருக்மணி — வீட்டுக்காரி

மற்றும் பலர்

# திரைக்குப்பின்

| | | |
|---|---|---|
| மூலக்கதை : | ... | துமிலனின் " புனர்ஜன்மம் " |
| திரைக்கதை : | ... | மெர்குரி பிலிம்ஸாரின் கதை இலாகா |
| வசனம் ; | ... | V. சீதாராமன் |
| பாடல்கள் ; | ... | V. சீதாராமன், N. S. சிதம்பரம். |
| சங்கீத டைரக்ஷன் ; | ... | M. S. விஸ்வநாதன் & பாண்டுரங்கன். |
| பின்னணி இசை பாடியவர்கள் : | ... | **இசைக்குயில் U. R. ஜீவரத்னம்,** P. லீலா, ராதாஜெயலக்ஷ்மி, ரத்னமாலா, ஜிக்கி, சத்யாவதி, சுப்புலக்ஷ்மி, A.M. ராஜா செல்லமுத்து, V. N. சுந்தரம் & ராகவன். |
| ஔிப்பதிவு டைரக்டர் : | ... | ஜித்தன் பானர்ஜி. |
| ஔிப்பதிவு ; | ... | V. குமாரதேவன். |
| உதவி : | ... | P. V. பாபு & U. மொய்தீன் கோயா, |
| ஒலிப்பதிவு டைரக்டர் : | ... | தின்ஷா K. தெஹ்ராணி |
| ஒலிப்பதிவு : | ... | V. மீனாக்ஷி |
| உதவி : | ... | C. K. கண்ணன் & S. குணசேகரன். |
| பிராஸஸிங் ; | ... | T. R. எதிராஜ் & R. நடேசன். |
| ஆர்ட் : | ... | N. குப்புசாமி. |
| செட்டிங் : | ... | V. செல்லம் ஆச்சாரி & R. பாலசுந்திரம், |
| மோல்டிங் : | ... | M. கோபால் பிள்ளை. |
| மேக்கப் : | ... | தனகோடி, K. முகுந்த குமார் & K. G. நாயர் |
| உடை அலங்காரம் : | ... | C. K. ஹரி. |
| நடன அமைப்பு : | ... | ராமசாமி பிள்ளை & சம்பத். |
| ஸ்டில் : | ... | R. N. நாகராஜ ராவ். |
| எடிட்டிங் ; | ... | P. M ராமமூர்த்தி. |
| ஸ்டுடியோ புரொடக்ஷன் மேனேஜர் : | ... | Mr. ஜியார்ஜ் தொரோப் |
| புரொடக்ஷன் நிர்வாகம் ; | | P. S. ராமலிங்கம் & K. P. ஹரி. |
| பப்ளிசிடி இன்சார்ஜ் : | ... | S. பிச்சாண்டி & K P. ஹரி. |
| ஸ்டுடியோ : | ... | நியூடோன் |
| டைரக்ஷன் ; | .. | **C. சீனிவாச ராவ்** |
| உதவி : | ... | K. S. சேதுமாதவன், B.Sc., & V. சீனிவாசன். |

தயாரிப்பு :

# T. S. வெங்கிடசாமி

# “ போன மச்சான் திரும்பி வந்தான் ”

## கதைச்சுருக்கம்

---

குருவியூர் பண்ணை பரம்பரையில் பிறந்தவன் சாம்பு......ஒரு அலாதிப்பிறவி. சாப்பிடும் நேரங்களைத் தவிர சதா “வெத்திலே... சீவல்...புகையிலே” அவன் வாயில் அறைபட்டுக்கொண்டே யிருக்கும். அதையும் மீறி “பழம்பெருமை, படாடோபப் பேச்சுகள்” அவன் வாயிலிருந்து சதா வெளிக்கிளம்பிக்கொண்டே யிருக்கும். இதற்கு ஒத்து ஊதுபவன், அவனுடைய ஒரே வேலைக்காரன்...கிட்டான். ஆனல் சாம்பு உலகமறியாத “ஒரு வெள்ளைச்சோளம்”. அவனுக்கு தங்கை சந்திராவின்பேரில் அளவு கடந்த அன்பு...மாணவியாயிருந்த சந்திராவுக்கு “மணம் முடித்து விட்டால்” மாப்பிள்ளை வீட்டிலேயே மகிழ்வுடன் தானும் காலம் போக்கலாம்.........என்று மனதில் எண்ணினன் சாம்பு. விளைவு “ஓர் விநோதமான விளம்பரம்”. எண்ணிய எண்ணங்களை உள்ளபடி வெளியிட்டு, “மாப்பிள்ளை—தேவை” என்று விளம்பரம் செய்தான். அண்ணன் செய்ததை அவதூராகக் கருதினள் கன்னி சந்திரா. சினங்கொண்டாள்......மனம் நொந்தாள்.

*  *  *

“தியாகு”...ஒரு தென்னட்டு வாலிபன். பூனவில் வேலையிலமர்ந்து இருந்தான். வாய்க்குப் பிடிக்காத வடநாட்டு சாப்பாட்டைச் சாப்பிட்டு வாய் மணமற்றுப்போய், “இல்லாள் ஒருவள் இல்லையே” என்று ஏங்கிக்கிடந்தான். விளம்பரத்தைக் கண்டு பூரிப்படைந்து, உடன் முன்பணமாக ரூ. 1000 அனுப்பி விண்ணப்பம் செய்துக்கொள்ளுகிறன், விவாகத்துக்கு.

இங்கு சாம்பு “பணத்தைக் கண்டதும்” மணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டான். செய்தியறிந்த சந்திரா சீற்றம் கொண்

டாள். மாப்பிள்ளை எவனோ ? எப்படியோ ? என்று மனம் குழம்பினாள். " கூனோ, குருடோ, செவிடோ, நொண்டியோ " என்று குறை கூறினார்கள் கூடப்படித்த மாணவிகள்.

நிச்சயதார்த்தத்துக்காக தியாகுவின் தாயார் பார்வதியும், தங்கை விமலாவும் சாம்புவின் வீடுதேடி வருகிறார்கள். பூனாவிலிருந்து மாப்பிள்ளை தியாகுவும் வரப்போகிறான்...நிலைமையை சமாளிக்க தைர்யமில்லாத சந்திரா, வீட்டைவிட்டு வெளிக்கிளம்பி விட்டாள்......வீடுதேடிவந்த மாப்பிள்ளை தியாகு வழியிலேயே விபரமறிந்து, மனமுடைந்து, வந்தவழியே திரும்புகிறான்.

பார்வதியும், விமலாவும் சந்தர்ப்பங்களின் காரணமாக சில தினங்கள் சாம்புவின் வீட்டிலேயே காலம் கழிக்க நேர்கிறது...... விமலா படித்த பெண். வெள்ளைமனதுடைய சாம்புவின் போக்கை விரும்புகிறாள். அவனை சீர்திருத்தி, பண்படுத்தி, கல்யாணமும் செய்துக்கொள்ள கங்கணமும் கட்டிக்கொள்கிறாள்.

* * *

பரம ஏழையாக பட்டிக்காட்டில் காலம் கழித்து வந்த குப்புசாமிக்கும், அவன் மனைவி அலமேலுவுக்கும் அதிர்ஷ்டத்தின் திடீர் அணைப்பு கிட்டுகிறது. இப்பொழுது அவர்களுக்கு பட்டிணவாசம்......பல வழிகளிலும் ஜாலி !.........குஷால் !!

சந்திராவும், தியாகுவும் ஒருவரையொருவர் உதறிவிட நினைத்தாலும் " விதி " அவர்களை விட்டபாடில்லை. " தங்களை இன்னார் என்றே " அறிந்துக்கொள்ளாமல் பட்டிணத்தில் ஒரு இடத்தில் அகஸ்மாத்தாய் சந்திக்க நேரிடுகிறது. குப்புசாமி; அலமேலுவின் கார் அவர்களை தற்செயலாய் தாக்குகிறது. தங்கள் வீட்டில் கொண்டுபோய் வைத்து உடன் சிகிச்சையும் செய்கிறார்கள். இவர்களை " தம்பதிகள் " என்று தவறாக எண்ணிக் கொண்டு செல்லுகிறார்கள் அலமேலுவும் குப்புசாமியும். மானத்திற்கு பயந்து சந்திரா, " இந்திரா " என்றும், தியாகு " ராஜன் " என்றும் பெயரை மாற்றிக்கொண்டதால் " தன்னை மணக்க வந்த மாப்பிள்ளைதான் " தியாகு என்று சந்திராவுக்கும், தான் மாலை சூடப்போன மங்கைதான் " சந்திரா " என்று தியாகுவுக்கும் தெரிந்துக்கொள்ள சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடுகிறது.

" தம்பதிகள் " என்ற தவருன எண்ணத்திலேயே சந்திராவையும், தியாகுவையும் ஆதரித்து அன்புடன்நடத்திவருகிருர்கள் குப்புசாமியும், அலமேலுவும்.

இதன் மத்தியில் அலமேலு பணக்காரி ஆன செய்தி கேட்டு அவள் அண்ணன் மகன் " மணி " என்ற போக்கிரியும் மதருஸ் வந்து அவர்கள் வீட்டிலேயே வாசம்செய்ய ஆரம்பித்துவிடுகிருன். சந்திராவுக்கும் தியாகுவுக்குமுள்ள. அன்பையும், அவர்களுக்கு குப்புசாமியும் அலமேலுவும் காட்டும் ஆதரவையும் நாசம் செய்ய எத்தனிக்கிருன்.

* * *

சந்திராவையும், தியாகுவையும் தேடி சாம்புவும் விமலாவும் அகஸ்மாத்தாக மதருஸ் வந்து சேருகிருர்கள்.

* * *

1 சந்தர்ப்பத்தின் பேதத்தால் தம்பதிகள் அல்லாமலேயே தம்பதிகளாக நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் சந்திராவுக்கும் தியாகுவுக்கும் ஏற்படுகிறது ஒருபுரம். இருந்தபோதிலும் இவர்களுடைய உள்ளமும் ஒன்றுபட்டதால் உண்மையிலேயே தம்பதிகளாக " ஆகிவிடவேண்டும் " என்ற ஆர்வம் ஒருபுறம்.

2. " காதலர்களிடையே பிளவு ! " " குப்புசாமி அலமேலுவின் ஆதரவை குலைப்பது " இது மணியின் சூழ்ச்சி.

3. " தங்கையையும் தமையனையும் " தேடி அலைந்து திரிவதற்கு ஒரு முடிவே இல்லையா ?............என்பது சாம்பு விமலாவின் பிரச்சனை.

இவைகளின் முடிவு திரையில் (கதையின் முடிவில்)தான் காணமுடியும்.

சுபம் !!!

# " போன மச்சான் திரும்பி வந்தான் "

## பாடல்கள்

---

### 1. சந்திரா

இசை :— M. S விஸ்வநாதன் | சீர் :— V. சீதாராமன்
குரல் :— ராதா ஜெயலக்ஷ்மி

*ராகம் :- சுத்தசாவேரி* | *தாளம் :- ஆதி*

*(ஸ்ரீமத் சங்கராச்சாரியார்)*
*ஸ்லோகம்*

அங்கம் ஹரே : புலகபூஷணம் ஆஸ்ரயந்தி
ப்ருங்கரங்கனேவ முகுலா பாணம் தமாலம்
அங்க ஹ்ருதாகீல விபூதி ஆபாங்க லீலா
மாங்கல்ய தாஸ்து மம மங்கள தேவதாயா :

*பல்லவி*

ஆதாரம் நின்பாதம் அம்பிகையே—உன்
அருள் தந்து கண்பாரம்மா—கௌரி (ஆதார)

*அனுபல்லவி*

இதையம் நிறை அன்போடு ஈஸ்வரியே
இசை பாடி படைத்தோம் நல் மலரிதுவே
நிலவிடும் குணம் கொண்டு குறை நீக்கும் தாயே
மலைராஜன் மகிழ்ச் செல்வியே (ஆதாரம்)

*சரணம்*

அம்பா சங்கரி அரவிந்த லோசனி
அடியார்கள் துயர் தீர்க்கும் மதுரா நிவாஸினி
மறை புகழும் மாதா உன் திருவடியே
மறவாமல் எந்நாளும் வணங்கிடுவோம்
பொருளும் வாழ்வும் புகழும் ஓங்க—உனது
திருவருள்புரி—கருணைகரி—ஜெகமதில் (ஆதாரம்)

## 2. விமலா & ரத்னம்

இசை :- M.S. விஸ்வநாதன் சீர் :- V. சீதாராமன்

குரல் :- P. லீலா & ரத்னமாலா.

விமலா:- பெண்ணை வீட்டில் பூட்டியே
விந்தை செய்த நாட்டிலே
இந்நாளிலே—மாதரின் வாழ்விலே
இன்பம் காணுதே
அந்த நாளைப் போலே பெண்கள் இல்லாமலே
அறிவாலே மேன்மை பெற்றோம் எல்லோருமே
ஆண்கள் போல நாமுமே
ஆபீஸ் போகும் காலமே
அதிகாரம் திறமாக செய்யலாகுமே

ரத்னம்:- ஹைகோர்ட்டு பாரீஸ்டர் ஆகணும் நீங்க
அதில்லாமேப் போனாலோ ஆஸபத்ரி டாக்டர்
வேலைக்குப் போங்க
மன்றும் வேலைக்குத்தான் மதிப்பு ரொம்பத்தாங்க
பெண் டாக்டர்க்கும் சம்பாத்யம் ஏராளங்க (ஹை)

விமலா:- டாக்டர் வேலை—லாயர் வேலை—
ஏற்பது தொல்லைதானே
டப்பி மாத்திரை மாத்தித்தந்துட்டா
அப்பாவி பேஷண்ட் கிளோஸ்
தப்பு சாக்ஷியால் கேசு தோத்துட்டா—
வக்கீலுக்கில்லை பீஸ்
ஏசிப் பேசுவர் தவறுது
இந்த வேலை ரெண்டும் உதவாது (பலர்)
எவ்விதமான தொழிலும் பலவித
துன்பம் உள்ளதுதானே
—துன்பம் உள்ளதுதானே

ரத்னம்:- எந்த வேலையும் இடைஞ்சல்தாங்க
எதுக்கும் வேணும் துணிச்சல்தாங்க
என்ன செய்ய உத்தேசங்க உங்க
எண்ணம் எதுவென்று சொல்லுங்க.

விமலா:- (வசனம்) சொல்லட்டுமா...?
மாநிலமேலே மாதர்கள் நாமே இன்பம் காணவே
வழியும் சொல்வேனே நானே சீராகவே
தொழிலை ஏற்கும் தொல்லை எல்லாம்
தருவோம் ஆண்களுக்கே
அறிவைக் கொண்டு ஆளவேண்டும்
ஆண்களை நாமே (பகுத்தறிவை)

இருவரும்:- வாழ்வினிலே பெண்களுக்கிதுவே சந்தோஷமே.

## 3. சந்திரா

இசை :- M.S. விஸ்வநாதன் சீர் :- N. S. சிதம்பரம்
குரல் :- ஜிக்கி

*பல்லவி*

ஏனோ நானும் வாடுறேன் தாயான தேவியே
எல்லாம் வாழ்விலே புதிராய்க் காணுதே

*அனுபல்லவி*

மணவாளர் யாரோ ஊரென்ன பேரோ
மாதென் நிலையே யாதெனப் புரியேன்
எனதாசை யண்ணன் மானமில்லாத
மணமேன் வைத்தாரோ—ஞானம் கொள்ளாரோ
என் மனமே சோகம் மேவுதே
மாறுன காலமோ—எல்லாம் கோலமோ—
பொல்லா மாயமோ (ஏனோ)

நலமாவதேதோ தீமையுமேதோ
நானென்றும் அறியேன் பேதையென் புரிவேன்
வளமான ஜோதிப் பாதை இல்லாதே
மனமே நொந்தேனே தேவி நீ பாராய்
மெய்யெதுவோ—பாழும் பாரிலே
மேலான வாழ்விதோ
சொல்லத் தாழ்விதோ—பொல்லா நேரமோ

## 4. கிட்டான் & ரத்னம்

இசை :- M. S. விஸவநாதன் சீர் :- V. சீதாராமன்

குரல் :- செல்லமுத்து & ரத்னமாலா

கிட்டான்:- குடுத்திடு...நீயா குடுத்திடு...ஒழுங்கா
குடுத்திடு...நீ ஓடி ஓடி உலகத்தையே
சுத்தினலும் விடவே மாட்டேன் (குடுத்திடு)

ரத்னம்.- மாட்டேனே தரவே மாட்டேனே
நீங்க எட்டுத்தரம் குட்டிகரணம்
போட்டுக் கெஞ்சி கேட்டாலும்
மாட்டேனே...தரவே மாட்டே...னே

கிட்டான்:- இது நிஜமா ?

ரத்னம்:- பின்னே பொய்யா !

கிட்டான்:- தரமாட்டியா ?

ரத்னம்:- ஊஹூம்

கிட்டான்:- பொடியைக் கிணத்திலே போட்டே (டப்பி)
எனது குடியைக் கெடுத்துப் போட்டே
பெட்ரோல் இல்லாத மோட்டாரைப் போலே
ப்ரேக் போட்டிடும் மூளையும் இனிமேல் (பொடியை)

ரத்னம்:- தண்ணி குழாயதைப் போல—மூக்கு
என்னேரமுமிருந்தாலே
கண்டால் வெறுப்பார் மாதருங்க
நம்ம காதலுக்கும் அது டேஞ்சருங்க—இந்த
பழக்கம் கெட்டதுங்க—பொடி
பழக்கம் விட்டுடுங்கோ
போடும் வழக்கம் விட்டுடுங்கோ

கிட்டான்:- நீ ரொம்ப கண்டே !

ரத்னம்:- அதோ பாருங்கோ, உங்க மேல் துண்டை !

கிட்டான்:- அஹ ! சுர்ருனு ஒரு தரம் உரிஞ்சிப்புட்டாக்கா
சுறுசுறுப்பெல்லாம் ஓடிவரும்
சோடி மலேகளை செண்டைப்போலே

ஆடி விளையாட ஊக்கம்தரும்
மானத்தை வில்லா வளைக்கணுமா.... இல்லை
மணலைக்கயிரா திரிக்கணுமா
கானத்தில் வாழும் புலியின் பாலை
கறந்து கொணுந்து, குடுக்கணுமா
ஒரு சிட்டிக்கை இருந்தா போதும்

ரத்னம்:- அய்யே! அதைச்சட்டுனு மறந்துடப்பாரும்

கிட்டான்:- ஐயோ.... ச்சூ....

ரத்னம்:- ஆசைக்கிளி இந்த ரத்தினமா?
இல்லை நாசியில் போடும் சூரணமா?
எது வேண்டும் அதைச் சொல்லிடுங்க
இந்த ரெண்டிலே ஒண்ணு தள்ளிடுங்க

கிட்டான்:- எப்படி மறப்பேண்டி—பொடிதான்
என்னுயிர் நாடியடி

ரத்னம்:- செப்பிடு வித்தைபோல் மறக்க
செப்பிடுவேன் வழியே

கிட்டான்:- அது என்னவாம்?

ரத்னம்:- நான் சொல்லவா?

கிட்டான்:- ஓ....ஹோ!

ரத்னம்:- உலகத்தை மறந்திடலாம்

கிட்டான்:- ஜோடி உன்போல் இருந்தாலே

இருவரும்:- இந்த உலகத்தை மறந்திடலாம்
ஜோடி உன்போலிருந்தாலே

## 5. சந்திரா

இசை :- பாண்டுரங்கம் — சீர் :- V. சீதாராமன்

குரல் :- U. R. ஜீவரத்தினம்

*ராகம்:- கரகரப்ரியா* — *தாளம்:- ஆதி*

*பல்லவி*

யாரை ஏமாற்ற வந்தீர்—பொய்
யான கட்டுக்கதைகள் தானே மொழிந்து இங்கு

*அனுபல்லவி*

பேரை மறைத்தாலும்—ஊரை மறைத்தாலும்
ஆரூர் தியாகராஜன் நீரென்று கண்டுகொண்டேன்(யாரை)

*சரணம்*

நீரணி செஞ்சடை நிலவோடு பாம்பெங்கே ?
திரிசூலம் மானும் மழுவும் எங்கே ? உந்தன்
அறுமுகன் கணநாதன் அன்னை சிவகாமி எங்கே
அத்தனையும் மறைத்து எத்தனைப்போலவே வந்து (யாரை)

## 6. சந்திரா & தியாகு

இசை :- பாண்டுரங்கம் சீர் :- V. சீதாராமன்

குரல் :- A. M. ராஜா & U. R. ஜீவரத்தினம்

தியாகு:- இதயமென்னும் கோயில் தன்னில்
இன்ப தெய்வம் உன்னை—தினமும்
துதிபுரிந்து காதல் மலர்
சூடி மகிழ்வேனே (சூடிமகிழ்)

சந்திரா:- ஆசையாகும் நெய்யை ஊற்றி
அன்புத் திரியேற்றி—நான்
நேசம் என்னும் விளக்கை ஏந்தி
ஆலாத்தி எடுப்பேனே

தியாகு:- கண்ணைப் பறிக்கும் வண்ணத்தோகை
கலாப மயிலே

சந்திரா:- என் எண்ணமறிந்து விண்ணிலிருந்து
என்னை மயக்கும் முகிலே....ஆ....

தியாகு:- கன்னித்தமிழிலே

சந்திரா:- காதற் கவியிலே

தியாகு:- கலந்த இன்பமதைக் காண்போம் நம் வாழ்விலே

சந்திரா:- கலந்த இன்பமதைக் காண்போம்
நம் வாழ்விலே....ஓ....

## 7. ச்ாம்பு, விமலா, ரத்னம், கிட்டான்.

இசை :– பாண்டுரங்கம் சீர் :– V. சீதாராமன்
குரல் :– V. N. சுந்திரம், ராகவன், சத்ப்ாவதி, சுப்புலக்ஷ்மி.

சாம்பு:- ஓடம் போல நமது வாழ்வு ஓடணும்—மன
உல்லாசமே அடைய வழி நாமே தேடணும்
மறைந்த சோதரியை மறுபடி தேடிவந்து
மணமே செய்து வைத்து கண்ணுல்
காணவேணும் (ஓடம்போல)

விமலா:- மணமே புரிய வந்த மாப்பிளேயும் ஓடிவிட்டான்
எனதுயிர் அண்ணனே நான் எவ்விதமும்
பார்த்திடணும்

ரத்னம்:- பொங்கும் அலேயிதே கரைசேரும் பான்மைபோல்

கிட்டான்:- "போன மச்சான் திரும்பி" இங்கே
வரவேணும் பூமணத்துடன் (ஓடம்)

எல்லோரும்:- (கோரஸ்)
இன்பமுடன் துன்பம் வரும் வாழ்விலே அதைக்
கண்டு அஞ்சினுலே ஏதும் பயனில்லே
பரந்த உலகினிலே
எதையும் ஏற்று வாழும் மனேதிடம்
இருந்திடணும் (ஓடம்)

எங்கள் படத்தில் வரும் இன்னிசையை
மகிழ்ச்சிக்கு உரிய
**H. M. V., கொலம்பியா**
இசைத்தட்டுகளில் கேட்டு இன்பமடையுங்கள்

*பிரபாத் பிரஸ், வேலூர். போன் 92*

# எதிர்பாருங்கள் !!!

## எமது அடுத்த மாபெரும் தயாரிப்பு

## அதிவிரைவில் அறிவிக்கப்படும்

பிரபாத் பிரஸ், வேலூர். போன் 92